1989 பிப்ரவரி 13] (பேரவைத் தலைவர்)

மேலும் பாராளுமன்றத்திலும், மற்ற சட்டமன்றங்களிலும் நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள பொருள்களை முன்னமேயே வெளியிட்டாலும்கூட, அது அவை உரிமைப் பிரச்சினையில் அடங்காது என்று பல தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. ஆளுநர் உரைக்குப் பின்புதான் அவைக் கூட்டமே தொடங்குகிறது. எனவே இதில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, அவை உரிமை மீறல் பிரச்சினை எதுவுமில்லை என்று தெரிவித்து அமைகிறேன்.

திரு. சா. பீட்டர் அல்போன்ஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே இரண்டு பிரச்சினைகளைச் சொல்லியிருக்கிறேன் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்ப்புக்குப் பிறகு எதையும் எழுப்பக்கூடாது என்பது அவையின் மரபு.

(முற்பகல் 10-10)

4. தகவல் கோரல்.

முன்னாள் முதலமைச்சர்களின் உருவப் படங்களை பேரவையில் வைத்தல்.

*திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உங்கள் மூலமாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வாயிலாக நாட்டு மக்களுக்கு மகிழ்ச்சி அளிக்கத்தக்க தொரு அறிவிப்பை அன்போடு எதிர்பார்க்கிறேன். தமிழக சட்ட மன்றத்தில் ஏறக்குறைய 11 ஆண்டுக் காலம் தமிழக முதலமைச்சராகத் தொடர்ந்து பணியாற்றி, மக்களுடைய இதயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களுடைய உருவப் படம் சட்டமன்றத்திலே திறந்து வைக்கப் படும் மகிழ்ச்சியான நாளை முதலமைச்சரவர்கள் அறிவிக்க வேண்டுமாய் உங்கள் மூலமாக, இந்த ஒழுங்குப் பிரச்சினை வாயிலாக வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை நீங்கள் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் சொல்வது பொருத்தமாக இருக்கும். இது ஒழுங்குப் பிரச்சினையாகாது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஒழுங்குப் பிரச்சினை மூலமாக மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் ஒரு பெருந்தன்மையான அறிவிப்பைத் தான் நாங்கள் எதிர்பார்த்தோம். இந்தச் சட்டமன்றத்தில் கட்சிகளுக்கு அப்பாற்பட்டு பல்வேறு தலைவர்களுடைய படத்தையும் புரட்சித் தலைவரவர்கள் முதலமைச்சராக இருந்தபோது திறந்து வைத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே அவருடைய படத்தைத் திறந்து வைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்,

[1989 பிப்ரவரி 13

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சியினுடைய துணைத் தலைவரவர்கள் என்னுடைய பெருந்தன்மை குறித்துக் குறிப்பிட்டார்கள். அண்மையில் டெல்லி மாநகரம் சென்றபோது நிருபர்கள் கேட்டார்கள். இந்த ஓராண்டுக் காலத்தில் தமிழ்நாடு மாளிகையில் இருந்த மாண்புமிகு மறைந்த முதலமைச்சரவர்களுடைய படம் எடுக்கப்பட்டுவிட்டது. அது மீண்டும் வைக்கப்படுமா என்று நிருபர்கள் கேட்டார்கள். அவர்களுக்கு நான் சொன்ன பதிலை நினைவூட்ட விரும்புகிறேன். ஏற்கெனவே 7 ஆண்டுக்காலம் முதலமைச்சராக இருந்த என்னுடைய படம் அங்கே இருந்தது. அதை பழைய அரசு எடுத்துவிட்டது. இருந்தாலும், நான் பெருந்தன்மையோடு, முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய படத்தை டெல்லியிலே (மேசையைத் தட்டும் ஒலி)—தமிழ்நாடு மாளிகையில் வைப்போம் என்று சொல்லியிருக்கிறேன். அந்தப் பெருந்தன்மை தொடரும். (மேசையைத் தட்டும் ஒலி).

5. ஒழுங்குப் பிரச்சினை.

(அ) தற்காலிகப் பேரவைத் தலைவர்கள் நியமனம் குறித்து.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவரவர்களே Point of order, Pro Tem Speaker, Article 180 (1)-ன்படி நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிகழ்ச்சிகள் தொடங்கிய பிறகுதான் பேரவை உறுப்பினர்கள் மற்ற ஒழுங்குப் பிரச்சினைகளை எழுப்ப முடியும். (குறுக்கீடு) இரண்டாவது, அவை முன்னால் என்ன பிரச்சினை எழுப்பப்படுகிறதோ, அது தொடர்பான ஒழுங்குப் பிரச்சினை மட்டும்தான் எழுப்ப முடியும். முதலில் ஆளுநர் உரையில் வாதத்தைத் தொடங்கிய பிறகு, தாங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்களோ, அதை நீங்கள் தாராளமாகச் சொல்லலாம். ஒழுங்குப் பிரச்சினை எழுப்பலாம் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

4. தகவல் கோரல்—தொடர்ச்சி.

முன்னாள் முதலமைச்சர்களின் உருவப் படங்களைப் பேரவையில் வைத்தல்—தொடர்ச்சி.

திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வரவர்கள் பெருந்தன்மை தொடரும் என்றார்கள். அந்த வகையிலே புரட்சித் தலைவர் அவர்களுடைய உருவப் படம் இங்கே திறந்து வைக்கப்படும் என்பதை வாக்குறுதியாக நான் எடுத்துக் கொள்கிறேன். அதோடு, அந்தப் பெருந்தன்மை மேலும் தொடர்ந்து இடைக்காலத்தில் முதலமைச்சராக இருந்த திருமதி ஜானகி இராமச்சந்திரன் அவர்களுடைய உருவப் படத்தை அமைச்சரவை கூடும் அறையில்—Cabinet Room—திறந்து வைக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.